புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கவிஞர் வாலியின் திரையிசைப் பாடல்களில் அரசியல் சிந்தனைகள்

முனைவர் மு.சுரேஷ்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
பெரம்பலூர் - 621 212.

## முன்னுரை

இந்திய அரசியலை உலகநாடுகள் இன்றைய சூழலில் உற்று கவனித்துக் கொண்டிருக்கின்றன என்பதை மறுக்க இயலாது. மண் வளம், மலைவளம் மற்றும் இயற்கை வளங்களும் நிறைந்து கிடக்கின்ற நம் தாய்த்திருநாட்டில் மலிவான அரசியல்(கையூட்டு, இன்ன பிற) நடந்தேற தவறியதில்லை என்று சொன்னால் மிகையல்ல. மூவேந்தர்கள் உள்ளிட்ட பல்வேறு மன்னர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் மக்களுக்காக ஆட்சி நடத்தியதை வரலாருகளும், இலக்கியங்களும் எடுத்துரைக்கின்றன.

இந்நிலையில் நாடாளும் தலைவர்கள் சொந்த நாட்டைச் சுரண்டி அந்நிய நாடுகளிலே பதுக்கி மக்களை ஏமாற்றும் அவலச் செய்திகளை பத்திரிகைகளும், ஊடகங்களும் தந்து கொண்டுதான் இருக்கின்றன. இப்படி நீண்ட குறைபாடுகளுக்கும், குழப்பங்களுக்கும் காரணம் பிற்போக்குத்தனமான அரசியல் நடவடிக்கைகளேயாகும். இவை மாற்றியமைக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இத்தகைய குழப்பமான சுயநல அரசியலுக்கு இலக்கியங்கள் காட்டுகிற அரசியல் நெறிகளே இன்றைய தேவையாக உள்ளது. அவ்வகையில் கவிஞர் வாலியின் திரையிசைப்பாடல்கள் வலியுறுத்துகின்ற அரசியல் சிந்தனைகளை இக்கட்டுரையில் காண்போம்.

## ஆட்சியாளர்களுக்கிரிய கடமை

ஆளும் தலைவர்கள் நாட்டையும், மக்களையும் வழிநடத்தவும் காப்பாற்றவும் கடமைப்பட்டவர்கள். தன்னலம் மறந்து பிறர்நலம் பேணுதல் அவசியமாகும். இத்தகைய தலைவர்களை இலக்கியங்களிலும், இதிகாச புரணங்களிலும் இன்றளவிலும் காணமுடிகிறது. இன்றைய அரசியல் ஊழல் புகர்களும், வழக்குகளும் இல்லாத தலைவர்களே இல்லை என்கிற நிலை ஏற்பட்டிருக்கின்றது. இது மாற்றப்பட வேண்டும் என்று எண்ணிய கவிஞர் வாலி ஒரு பொறுப்புள்ள தலைவனின் குரலாக கீழ்வரும் பாடலில் பதிவு செய்கிறார்.

“ஒரு தவறு செய்தால்
அதைத் தெரிந்து செய்தால்
அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்
உடல் உரைக்கச் சொல்வேன்
அதில் பிழைக்கச் சொல்வேன்
அவர் உரிமைப் பொருள்களைத் தொடமாட்டேன்”[1]

என்று உரக்கச் சொல்கிறார். தவறு செய்கின்ற எவரையும் தப்பிக்க விடமாட்டேன் என்கிற தலைவனின் குரலில் தெளிந்த அரசியல் பார்வை இருப்பதை உணரலாம். மேலும், வாயில்லாப் பூச்சிகளாய், உரிமைச் சிறகொடிந்த ஊனப் பிறவிகளாய் வாய்மூடி கூனிக்குறுகி அடிமைப்பட்டு கிடக்கின்ற மக்களுக்காக குரல் கொடுக்கும் வாலி,

“ இங்கு ஊமைகள் ஏங்கவும் உண்மைகள் தூங்கவும்

நானா பார்த்திருப்பேன்
ஒரு தலைவன் உண்டு அவன் கொள்கை உண்டு
அதை எப்போதும் காத்திருப்பேன்
முன்பு ஏசு வந்தார் பின்பு காந்தி வந்தார்
இந்த மானிடர் திருந்திடப் பிறந்தார்
இவர் திருந்தவில்லை மனம் வருந்தவில்லை
அந்த மேலோர் சொன்னதை மறந்தார்"[2]

என்று மிகுந்த பொறுப்போடு ஏழைகளுக்காகக் குரல் கொடுக்கின்ற அதே நேரத்தில், திருத்திக்கொள்ளாத ஆட்சியாளர்களை மேலோர்(ஏசு, காந்தி) சொன்னதை மறந்தார் என்றும் பாடுகிறார். அதுமட்டுமின்றி சுரண்டல்காரர்களின் முகத்திரையைக் கிழிக்கும் விதமாக அவர்களைச் சாட நினைத்த கவிஞர் வாலி,

"உங்கள் கைகளில் கனத்திடும் பணப்பை
வந்த காரணம் உழவனின் கலப்பை
எங்கள் தோழர்கள் வழங்கிய உழைப்பை
உண்டு கொழுத்து உங்கள் இரைப்பை
உக்கள் வருவாய் பெருக்கியக் கூட்டம் - இங்கு
ஒரு வாய் சோற்றுக்கு வாட்டம் - இதை
அறிவால் உணர்த்திட வேண்டும் - இல்லை
ஒருநாள் எரிமலை தோன்றும்"[3]

என்று ஏழை விவசாயிகளை ஏய்த்துப் பிழைக்கும் எத்தர் கூட்டத்தின் இழிசெயலை எண்ணி உள்ளம் குமுறும் கவிஞர், தற்கால அரசியல் நிலைகளைப் படம் பிடித்துக் காட்டுவது போல் பின்வரும் பாடல்வரிகளை எழுதுகிறார். என்னவென்றால்,

"தப்புகள் குற்றங்கள் ஆயிரம் செய்து
தப்பிக்கும் பொல்லாத கூட்டம்
துப்புகள் செய்கின்ற காவலர் கண்ணில்
தப்பிக்கும் கூட்டங்கள் மாட்டும்
காவல் இங்கு இல்லை என்றால் காடு ஆகும் நாடு
தேடி வைத்த செல்வங்கள் எல்லாம் திருடர் கைகளோடு
சாதிச்சண்டை கட்சிச்சண்டை சந்தியிலே நடக்கும்
அச்சமின்றி காவல்துறை அங்கு சென்று அடக்கும்"[4]

என்று இன்றைய மக்களாட்சியின் அவலத்தை மிக அழகாக எடுத்துரைக்கிறார். கவிஞரின் இந்தப்பார்வை மேற்குறித்த அவலங்கள் அனைத்துக்கும் காரணம் சரியான அரசியல் நடைபெறாததுதான் என்பதை தெளிவுபடுத்துகிறார். இது மாற்றப்பட வேண்டுமானால் சரியான அரசியல் நடவடிக்கைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதை மேற்குறித்த பாடலின் வழி வலியுறுத்துகிறார்.

உழைப்பாளர் நிலைமை

எந்தவொரு நாடும் உலக அளவில் உயர வேண்டுமெனில் தொழில் புரட்சி ஏற்பட வேண்டும். தொழிலாளர்கள் துயரின்று வாழ்தல் வேண்டும். உழைப்பாளியின் உயர்வுதான் ஒரு நாட்டின் உயர்வாகக் கருதப்பட வேண்டும். ஆனால் இந்தநிலை இன்ருவரை பூமிப்பந்தின் எந்தத் திசையிலும் முழுமை பெற்றதாகத் தெரியவில்லை. மாறாக உழைப்பாளிகள் சுரண்டப்படுகிறார்கள், ஏமாற்றப்படுகிறார்கள், அவமானப்படுத்தப்படுகிறார்கள்.

அரசின் சுவாசக்காற்றாக முதலாளித்துவமே இருந்து வருகிறது எனபதை தெளிவாகக் காண முடிகிறது. ஆனால், ஏழை, எளிய பாட்டாளி மக்கள் எடுப்பார் கைப்பிள்ளையாய் நடத்தப்படுகின்ற பேரவலம் தொடர்ந்து கொண்டிருப்பதையும் பார்க்க முடிகிறது. இந்த அவலத்தை உணர்ந்த கவிஞர் வாலி,

"உலகத்தின் தூக்கம் கலையாதோ
உள்ளத்தின் ஏக்கம் தொலையாதோ
உழைப்பவர் வாழ்க்கை மலராதோ
ஒருநாள் பொழுதும் புலராதோ"[5]

என்று உழைப்பாளர்களுக்காக குரல் கொடுக்கிறார். அதோடு மட்டுமல்லாமல் ஓட்டிய வயிறும், ஓட்டைக் குடிசையும், ஒளியிழந்த கண்களுமாய் வாழ்க்கை நடத்துகின்ற ஏழைத் தொழிலாளிகள் என்ன செய்வார்கள் என்று எண்ணித்துடித்த கவிஞர்,

“படைத்தவன் மேல் பழியுமில்லை
பசித்தவன் மேல் பாவமில்லை
கிடைத்தவர்கள் பிரித்துக் கொண்டார்
உழைத்தவர்கள் தெருவில் நின்றார்
பலர் வாட வாட சிலர் வாழ வாழ
ஒருபோதும் தெய்வம் பொறுத்ததில்லை”[6]

என்று தொழிலாளர்களின் நிலை கண்டு பரிதாபப்படுகிறார். இந்த வரிகளை மீனவர்களின் பிரச்சனைகளை மையப்படுத்தி எழுதியுள்ளார் கவிஞர். மீனவர்களின் பிரச்சனை இன்றுவரை தீர்ந்தபாடில்லை. அதற்குக் காரணம் கொள்கையற்ற அரசியல், மக்களைப் பற்றிய அக்கறை இல்லாத அரசியல்தான் காரணம் என்பதையும் கவிஞர் வாலி மிகச்சிறப்பாக எடுத்துரைக்கிறார்.

வாழ்வாதாரத்தில் கவனம் கொளல்

ஓர் அரசு பலம் வாய்ந்ததாகவும், மக்களின் நம்பிக்கையைப் பெற்றதாகவும் இருக்க வேண்டுமென்றால் விலைவாசியை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும். ஆனால் இன்றைய நிலை காய்கறிகூட வாங்க முடியாத நிலைக்கு மக்கள்தள்ளப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமின்றி அத்தியாவசியப் பொருட்கள் ஏழைகளுக்கு எட்டாக் கணியாக இருக்கிறது. இந்நிலை மாற வேண்டும்.

அதுமட்டுமின்றி உற்பத்தி பெருக்கம் அதிகரிக்க வேண்டும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே ஒரு அரசே நிலையான அரசாகவும், பலமான அரசாகவும் இருக்க முடியும்.

ஆனால் இன்றைய அரசு அவ்வாறு இல்லையே என்று ஆதங்கப்பட்ட கவிஞர் வாலி அவர்கள் விலைவாசி விஷம் போல ஏறிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் ஓர் ஏழைத்தந்தைக்கு மகன் பிறந்து, மேலும் சிரமத்தைக் கொடுக்கிறானே என்று தந்தையே வருந்துவதாக எழுதுகிறார். ஒரு குழந்தை பிறந்ததைக் கூட மகிழ்ச்சியாகக் கொண்டாட முடியாத சூழலை விலைவாசி உயர்வு ஏற்படுத்திவிடுகிறது. இதற்கெல்லாம் பொறுப்பு ஆளும் அரசியல் தலைவர்கள்தான் என்பதில் மாற்று கருத்து இருக்க இயலாது. அத்தகைய அவலத்தை எடுத்துரைக்கும் விதமாக,

“விலைவாசி மாறிப்போச்சு விஷம்போல ஏறிப்போச்சு
பெட்ரோல் விலை ஏறிப்போச்சு பாக்கெட்டையே மீறிப்போச்சு
பீச்சுப்பக்கம் காரைப் பாத்து நாளாச்சு
பஸ்ஸை விட்டு காரை விட்டு புகைவண்டி தேடிப்போனா
நிலக்கரி பஞ்சம் வந்து நின்னுப் போச்சு
பூசணிக்காய் விலை இப்போ சுண்டைக்காய்
அரிசிக்கும் பருப்புக்கும் ஆனைவிலை,
மகனே உணக்கேன் தெரியவில்லை”[7]

என்று வருமையின் பேரவலத்தை எழுதுகிறார். இந்நிலையில் இன்று ரசம் வைத்து சாப்பிடக்கூட முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ‘என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்’ என்று பாடிப்பாடி மகிழ்ந்த நாம் இன்று பல பொருள்களுக்கு வெளிநாட்டில் கையேந்தி நிற்கிறோம். இன்னும் எத்தனை காலம் கையேந்தி நிற்க போகிரோமோ என்கிற அச்சம் ஏற்படத்தான் செய்கிறது. கவிஞர் வாலியின் மேற்குறித்த வரிகள் நிகழ்கால அரசியலை படம்பிடித்துக் காட்டுவதோடு வருங்கால அரசியல் இம்மாதிரி இருந்துவிடக் கூடாது என்பதையும் வலியுருத்துகிறது என்றே சொல்லலாம்.

நிறைவுரை

கவிஞர் வாலியின் பார்வையில் இந்திய மக்களாட்சியும், அரசியல் நடவடிக்கைகளும் ஆரோக்கியமாக இல்லையே என்கிற ஆதங்கத்தை உணரமுடிகிறது. இந்நிலையில் நம் நாட்டில்

அரசியல் அவலங்கள் தொகுப்பின் விரியும். ஆகவே, இக்கட்டுரையில் குறிப்பிட்ட செய்திகள் இந்திய அரசியலை தூய்மைப்படுத்தும் நோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இங்கு சொல்லப்பட்ட மற்றும் சொல்லப்படாத குறைகள் அனைத்துமே நீக்கப்பட்டு தூய்மையான அரசியல் நெறிகளை உருவாக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும். இதை வலியுறுத்தும் நோக்கத்திலேயே இக்கட்டுரை கட்டமைக்கப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. வாலி, வாலி ஆயிரம் திரையிசைப் பாடல்கள், தொகுதி 1, ப.33
2. மேலது, ப.33
3. மேலது, ப.67
4. வாலி, வாலி ஆயிரம் திரையிசைப்பாடல்கள், தொகுதி 2, ப.66
5. வாலி, வாலி ஆயிரம் திரையிசைப் பாடல்கள், தொகுதி 1, ப.32
6. மேலது, ப.28
7. மேலது, ப.157

பயன்பட்ட நூல்


1. வாலி - வாலி ஆயிரம் திரையிசைப்பாடல்கள், தொகுதி 1,2
   குமரன் பதிப்பகம்
   19, கண்ணதாசன் சாலை, சென்னை - 17
   முதற்பதிப்பு - 29 அக்டோபர் 2010


********* ********* ********** ********* ********* ********** ********** **********